# போங்கடா நீங்களும் உங்க அரசியலும்

பெங்களூர் M.S. கமாத்தீன்

ஒழுக்கம் என்பது நேர்மை, தூய்மை, வாய்மை இதை ஒவ்வொரு மனிதனும் கடைபிடிக்க வேண்டும், தனி மனித ஒழுக்கம் என்பது மிக முக்கியமான ஒன்று குடும்ப தலைவன் ஒழுக்கமானவனாக இருக்கும் போது அவன் குடும்பம் ஒழுக்கமுள்லதாக ஆகிறது. அதன் மூலம் அவர்கள் வசிக்கும் தெரு ஒழுக்கமுள்ளதாக ஆகிறது.

ஒரு தெரு ஒழுக்கமுள்ளதாக ஆகும் போது, ஒரு ஊர் ஒழுக்கமுள்ளதாக ஆகிறது, ஒரு மாவட்டம் ஒழுக்கமுள்ளதாகும் போது ஒரு மாநிலமே ஒழுக்கமுள்ளதாகிறது, ஒரு மாநிலம் ஒழுக்கமுள்ளதாகும் போது ஒரு நாடே ஒழுக்கமுள்ளதாகிரது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் தனி மனித ஒழுக்கம் இன்றியமையதாகிறது.

தனி மனித ஒழுக்கத்தில் ஏற்பட்டுள்ள சறுக்கல் சகல காரியங்களிம் சங்கடங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. நாடு அதிகாரத்தில் உள்ளவர்கள் ஒழுக்க கேட்டிற்கு எப்போது ஆதரவு தந்தார்களே அப்போதே அந்த நாடு சீரழிவை நோக்கி போக தொடங்கிவிட்டது என்று அர்த்தம் அத்தகைய சூழ்நிலையித்தான் நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தகுதியற்றவர்களை தலைவர்களாக்கி அதிகாரத்தை தந்ததன் விளைவு தரங்கெட்ட ஒரு சமுதாயத்தையே 'அரசியல்வாதிகள்' என்ற பெயரில் உருவாக்கி விட்டார்கள். ரவுடி தனம் செய்து, கொள்ளையடித்து, கற்பழித்து, கொலை செய்தவன் தேடப்படும் குற்றவாளி பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். இத்தகைய தரங்கெட்ட தகுதிகளை கொண்டவர்கள்தான் அரசியலில் வலம் வர முடியும்; இவர்கள்தான் அதிகாரத்தில் ஜெலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கொள்கை பேசியவர்கள் எல்லாம் அதை தூரதூக்கி எறிந்து விட்டு கோடிகளை சம்பாதிக்க கேடிகளோடு கூட்டனி அமைத்துக்கொண்டு நாட்டை கொஞ்சம் கொஞ்சமாக கொள்ளையடித்து வருகிறார்கள். இந்த கொள்ளையர்களுக்கு ஒரு கொண்டாட்டம் பீகார் தேர்தலில் ஏற்பட்டது.

கொள்ளையர்களின் கோட்டையாக விளங்கும் பீகாரில் கடந்த பிப்ரவரியில் நடந்த தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. முதன் முறையாக பேரவைத் தேர்தலில் போட்டியிட்ட ராம் விலாஸ் பாஸ்வானின் (லோக் ஜன சக்திக்கு) 29 இடங்கள் கிடைத்தது.

பாஸ்வானின் ஆதரவு இல்லாமல் எவரும் ஆட்சி அமைக்க முடியாத நிலை லா தலைமையிலான ராஷ்ட்ரீய ஜனதா தளத்துக்கோ அல்லது பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டனிக்கோ ஆட்சி அமைக்க ஆதரவு தர முடியாது மூன்றாவது அணி ஆட்சி அமைக்க முன் வந்தால் ஆதரவு தர தயார் என்றார். அதுவும் முடியாது போக முஸ்லிம் ஒருவரை முதல்வராக்கினால் ஆர்ஜேடி என்ற லா கட்சிக்கு ஆதரவு தருகிறேன் என்றார்.

பாஸ்வானின் யோசனையை லா ஏற்க மறுத்தார், என் மனைவி ராப்ரி தேவிதான் முதல்வர் என்பதில் உறுதியாக இருந்தார். பல யோசனைகள், பல சுற்று பேச்சுவார்த்தைகள் எதுவும் பலன்தரவில்லை 'உடும்பான' பாஸ்வானின் கட்சியை உடைக்க திரை மறைவு வேலைகள் திறமையாக நடந்தன. எத்தகைய கீழ்தரமான வேலையை செய்தாவது பதவிக்கு வந்து விட எல்லா அரசியல்வாதிகளும் முயல்வார்கள் அவர்களிலே முதலிடத்திலிருப்பவர்கள் பா.ஜ.க.வினர் ஜார்க்கண்ட் மாநிலத்தில் எப்படியாவது ஆட்சியை பிடித்துவிட, பிற கட்சி எம்.எல்.ஏ.க்களையும், சுயேச்சைகளையும் ராஜஸ்தான் மாநிலத்துக்கு கடத்தி சென்று அடைத்து வைத்து தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டவர்கள். அதே போன்ற கீழ்தரமான வழிமுறையை பீகாரிம் கையாண்டார்கள். லோக் ஜனசக்தி எம்.எல்.ஏ.க்களை ஒரு பகுதியினரை ஆசை காட்டி அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 3 கோடி ரொக்கம், அமைச்சர் பதவி, அவர்களின் மனைவியருக்கு எம்.எல்.சி. பதிவு என்று பேரம் பேசப்பட்டது.

லா கட்சியின் தலைவர்களின் ஒருவரான ரகுவம்ச பிரசாத் சிங் மேற்படி பேரத்தை அம்பலப்படுத்த லா பிரசாத் யாதவ் தன் அதிகாரத்தை பயன்படுத்தி சட்டப் பேரவையை கலைக்க மத்தியரசை வற்புறுத்த 29 எம்.பி.களின் ஆதரவுள்ள லாவின் விருப்பப்படி பீகார் பேரவை கலைக்கப்பட்டது. கொள்ளையர்களின் கொண்டாட்டம் பகல் கனவானது.

மொழி இன மத வெறியை தூண்டி பதவிக்கு வருவதை ஒரு கொள்கையாகவே கொண்டுள்ல அரசியல்வாதிகளால் நாடு துண்டாடப்படுவது வெகு நிச்சயம் நாட்டை பற்றி கவலைபடக் கொள்ளையர்களின் கூட்டனி பல அயோக்கியதனங்களை செய்து வெற்றி பெற்று விடுகிறார்கள். தேசிய கட்சிகள் பெரும்பான்மை இல்லாமல் கூட்டனி ஆட்சிக்கு கூப்பிடும் போது பேரம் பேசி அமைச்சர் பதவிகளை பெற்றுக் கொள்கிறார்கள்.

அதிகாரம் உள்ள காபினெட் அமைச்சர் பதவிகளும் அதிகாரம் இல்லாத இணை அமைச்சர் பதவிகளும் பெற்றுக் கொள்ளும் உதிரி கட்சிகளால் மக்கள் வரி பணம் எப்படி எல்லாம் வீணடிக்கப்படுகிறது என்பதற்கு சின்ன உதாரணம்.

இணை அமைச்சர் ஒருவருக்கு ஒரு தனிச்செயலர், கூடுதல் தனிச்செயர், உதவி தனிச்செயலர். ஒரு முதல் தனி உதவியாளர், இரண்டாவது தனி உதவியாளர் இருவர், ஒரு கிளார்க், ஸ்டெனோ, இரண்டு பியூன், ஜமாதார் டிரைவர் என்று 12 பேர் பணியாற்றுகின்றனர். இவர்கள் எல்லோருக்கும் சேர்த்து மாதம் சுமார் 1.5 லட்சம் ஊதியம், அத்துடன் அமைச்சருக்கு தனி பங்களா அங்கு சேவை செய்ய ஊழியர்கள், காவலர்கள் என ஒரு கூட்டம், அமைச்சர் வரம்பில்லாமல் பயணம் செய்யும் சகை, குறைந்த பட்சம் ஒரு இணை அமைச்சருக்கு மாதம் 4 கோடி ரூபாய் செலவாகிறது. (புள்ளி விபரங்கள் 25.05.05, தினமணி) அரசியல்வாதிகளுக்கு எந்த வகையிம் நாங்கள் சலைத்தவர்கள் இல்லை என்கிறது அதிகாரிகள் கூட்டம்.

கடந்த சில ஆண்டுகளாக மாநிலங்களவை அதிகாரிகள் கோடைக் காலத்தில், லண்டனில் உள்ள ராயல் நாடாளுமன்ற நிர்வாக இன்ஸ்டிட்யூட்டுக்கு நிர்வாகப் பயிற்சிக்காகச் செல்கின்றனர், பிரிட்டிஷ் அரசியல் சட்டம், நாடாளுமன்றம் இயங்கும் முறை உள்ளிட்டவை குறித்து கருத்தரங்கம் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு 12 அதிகாரிகள் சென்றுள்ளனர். அங்கு 12 நாள் மூன்று நட்சத்திர ஹோட்டலில் தங்க வைக்கப்படும் அதிகாரிகளுக்காக அரசு சுமார் ரூ. 45 லட்சம் செலவிடுகிறது. இப்பயணத்தின் நோக்கம் அனுபவங்களை

அறிக்கையாக தாக்கல் செய்யவேண்டும் என்பது இது வரை தாக்கல் செய்த அறிக்கை மூலம் கிடைத்த பலன்? என்ன? என்பது யாருக்கும் தெரியாது.

இப்பயணத்தின் மூலம் ஒவ்வொரு அதிகாரிக்கும் ரூ. 50 ஆயிரம் முதல் ரூ. 60 ஆயிரம் வரை சேமிக்க முடியும் என்று கூறப்படுகிறது. ஆண்டு தோறும் மக்கள் பணம் வீணடிக்கப்படுவதைத் தவிர எந்த பலனும் இந்த பயணத்தில் இல்லை (ஆதாரம் : தினமணி 14.06.05) அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தங்கள் செகுசு வாழ்க்கைக்காக மக்கள் மீது வரிச்சுமையை ஏற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இதற்காக எத்தகைய பொய் சொல்லவும் தயங்குவதில்லை. கடந்த இரண்டு மாதங்களாக ஒரு ஒப்பாரி வைத்தார்கள். எண்ணை ய் நிறுவனங்கள் பெருத்த நஷ்டத்தை சந்தித்து வருகின்றன என்று நமது நாட்டின் ஒட்டு மொத்த எரிபொருள் தேவையில் 70 சதவீதம் வரை இறக்குமதி செய்யபடுகிறது. இந்தியாவின் ஆண்டுத்தேவை 12 கோடி மெட்ரிக் டன்னாகும் கச்சா எண்ணெயாக வெளிநாடுகளிலிருந்து வாங்கி சுத்திகரிப்பு ஆலைகளுக்கு அனுப்பும் பணியை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் செய்து வருகிறது. இதன் மூலம் கொழுத்த லாபம் சம்பாதித்து வருகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 60 சதவீதம் லாபம் ஈட்டியுள்ளது.

2004 2005ம் ஆண்டில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் ரூ. 10 மதிப்புள்ள பங்குக்கு லாப ஈவு (டிவிடெண்ட்) ரூ. 40 வழங்கப்பட்டுள்ளது. அதாவது நிகர லாபம் 400 சதவீதம் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லாபமே இப்படி என்றால் சுத்திகரிப்பு நிலையங்களின் லாபம் தனிக்கணக்கு.

கச்சா எண்ணெயிலிருந்து பத்து வகையான பொருள்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. அதாவது பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஏடிஎஃப் எனப்படும் விமானங்களுக்கான பெட்ரோல், கெரசின் உலை எண்ணெய், நாப்தா, எல்.எஸ்.எச்.எஸ். உயவு எண்ணெய் மற்றும் எல்.டி.ஓ. இவை ஒவ்வொன்றுக்கும் தனி தனி லாபம் சம்பாதிக்கின்றன சுத்திகரிப்பு நிலையங்கள்.

கோடி, கோடியாய் கொள்ளை லாபம் சம்பாதிக்கும் இவைகளுக்கு நஷ்டம் என்று சொன்னால் நம்ப முடியுமா? சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வு ஒவ்வொரு நாளும் பல ஆயிரம் கோடி ரூபா ய் நஷ்டத்தை எண்ணைய் நிறுவனங்கள் சந்தித்து வருகின்றன என்ற பொய். ஒவ்வொரு முறையும் விலை ஏற்றத்தின் போது சொல்லப்படுகிறது. நூறு கோடி இந்தியர்களையும் மடையனாக்கும் செயலை அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தொடர்ந்து செய்தே வருகிறார்கள்.

சென்னையில் விற்கப்படும் ஒரு லிட்டர் பெட்ரோக்கு விலை 44.26 பைசா இதற்கு மத்திய, மாநில அரசுகள் விதிக்கும் வரி 24.81 பைசா இப்படி போட்டி போட்டுக் கொண்டு வரிவிதிப்பது எந்த நாட்டிம் நடக்காத ஒன்று.

அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கூட்டனி அமைத்துக் கொண்டு நாட்டை கோடி, கோடியாக கொள்ளை யடித்து வருகிறார்கள். பீகார் தேர்தக்கு ரூ. 250 கோடி செலவானது பற்றி இவர்களுக்கு என்ன கவலை கலைக்கும் கலச்சாரத்தை தொடங்கி வைத்த காங்கிரஸ்ஸின் 120வது கலைப்பாகும் பீகார் சட்டப் பேரவை.

இத்தகைய நாடாளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கைகள் பொது மக்களுக்கு ஜனநாயக அமைப்பின் மீதே அவநம்பிக்கையை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது. அதனால்தான் மேள்தட்டு மற்றும் நடுத்தர

வர்க்கத்தினர் ஓட்டுபோட போவதேயில்லை ‘‘போங்கடா நீங்களும் உங்க அரசியம்’’ உங்களுக்கு ஓட்டு போட்டு என் நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை என அவர்கள் எல்லாவற்றையும் புறக்கணிக்கிறார்கள்.

இன் நிலைக்கு என்ன காரணம்? தரங்கெட்டவர்கள் நம்மீது அதிகாரம் செத்த அல்லாஹ் ஏவியது ஏன்?

‘‘தூதர்(ஸல்) அவர்கள் (ஒரு கிராமவாசியிடம்) நம்பகத்தன்மை பாழ்படுத்தப்பட்டு விட்டால் மறுமை நாளை நீ எதிர்பார்க்கலாம் என்று கூறினார்கள். அவர் அல்லாஹ்வின் தூதரே!

அது எவ்வாறு பாழ்ப்படுத்தப்படும்? என்று கேட்டார் அதற்கு (ஆட்சியதிகாரம், நீதி நிர்வாகம் போன்ற) எந்தப் பொறுப்பும் அதற்குத் தகுதியற்றவர்களிடம் ஒப்படைக்கும் போது மறுமை நாளை எதிர்ப் பார்த்துக்கொள்’’ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *அறிவிப்பவர் : அபூ ஹுரைரா(ரழி), நூல் : புகாரி 59/1, 6496/7 பாகம்*

இன்றைய ஆட்சியாளர்களை விட நாளைய ஆட்சியாளர்கள் கேடு கெட்டவர்கள் தான் வரப்போகிறார்கள் இதன் மூலம் ஜனநாயகத்தின் மீதுள்ள வெறுப்பு மேம் அதிகமாகவே செய்யும், மாறுதல் தேட கூடியவர்களும் ஒரே ஆறுதலாய் இருப்பது இஸ்லாமிய ஆட்சிதான் இறைச்சட்டங்கள் அமல்படுத்தப்படும் போது அக்கிரமங்களும் அநீதிகளும், அடவாடி தனங்களும் அடியோடு அழிக்கப்படும். அமைதியே எங்கும் நிலைவியிருக்கும். அந்த இறையாட்சிக்கான அடிப்படை வேலைகளை செய்ய வேண்டிய கடமை இன்றைய முஸ்லிம்களுக்கு உள்ளது. குர்ஆன், ஹதீஸை முழுமையாக பின்பற்றுவதன் மூலம் அந்தக் கடமையை நிறைவேற்றலாம் அதற்கான வழியை அல்லாஹ் அனைவருக்கும் இலகுவாக்கி தரட்டும். ஆமீன்.

டிசம்பர் 2005 அந்நஜாத்